<u>பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர், சென்னை - 6 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: மருத்துவர். தி.சி.செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,

ந.க.எண். 114184/ப.தொ.4/இரு3/2019

நாள் : 13.01.2023

பொருள் பொது சுகாதாரம் - பணியாளர் தொகுதி - தமிழ்நாடு அமைச்சுப்பணி- திருமதி.யோ.செலின்தங்கம் (பிறந்த தேதி- 28.07.1986) (தா/பெ. (அமரர்) திருமதி.சா.அன்னசெல்வம், கிராம சுகாதார செவிலியர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி சுகாதாரப்பகுதி மாவட்டம் - 25.03.2009 அன்று பணியிலிருக்கும் பொழுது மரணம்)- கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் செய்து ஆணை வழங்குதல்- தொடர்பாக.

பார்வை

1) தூத்துக்குடி சுகாதாரப்பணிகள் துணைஇயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.3705/அ2/2010 நாள் 16.12.2019.
2) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ-1) துறை, நாள்:23.01.2020.
3) இவ்வலுவலக கடித ந.க.எண்.114184/பதோ4/இரு.3/2019 நாள் 18.08.2021.
4) தூத்துக்குடி சுகாதாரப்பணிகள் துணைஇயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.3705/அ2/2010 நாள் 17.12.2021.
5) இவ்வலுவலக கடித ந.க.எண்.114184/பதோ4/இரு.3/2019 நாள் 11.07.2022.
6) தூத்துக்குடி. சுகாதாரப்பணிகள் துணைஇயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.3705/அ2/2010 நாள் 23.08.2022

<u>**ஆணை:-**</u>

பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படியும் மற்றும் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் தொடர்பாக இந்நேர்வில். பார்வை ஒன்று, நான்கு மற்றும் ஆறில் காணும் கடிதத்தில் சமர்ப்பித்துள்ள கல்வித் கருத்துரு / வருவாய்த் துறையினரின் சான்றிதழ்கள் மற்றும் தகுதிச்சான்றிதழ்கள் அடிப்படையிலும் மற்றும் முதுநிலை வரிசையின்படியும்

...(2)

மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 17(1)-ன்படியும் தூத்துக்குடி சுகாதார பகுதி மாவட்டம், மாப்பிள்ளையூரணி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியராக பணிபுரிந்து 25.03.2009 அன்று பணியிலிருக்கும் பொழுது மரணமடைந்த திருமதி.சா.அன்னசெல்வம் என்பவரின் மகள் திருமதி.யோ.செலின்தங்கம் (பிறந்த தேதி - 28.07.1986) என்பவர் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக ரூ.19500 - 71900/- நிலை 8 (Level 8) என்ற சம்பள ஏற்ற முறையில் காலியாக உள்ள **அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஏரல், தூத்துக்குடி சுகாதாரப்பகுதி மாவட்டத்தில்** கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிநியமனம் செய்யப்படுகிறார்.

அ. இவரின் இளநிலை உதவியாளர் பணி நியமனம் தற்காலிகமானது.

ஆ. அரசாணை எண்.29, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 7.3.1988-ன் அடிப்படையில் அவர் எழுத்து மூலம் அளித்துள்ள உறுதிமொழியின்படி இப்பணிநியமனத்தில் தவறுகள் ஏதேனும் பிற்காலத்தில் தெரியவந்தால், இத்தனியர் முன்னறிவிப்பு இன்றி உடனடியாக பணிநீக்கம் செய்யப்படுவார்.

இ. இந்த பணிநியமனம் தொடர்பாக தனியர் அளித்துள்ள விவரங்கள் மற்றும் சான்றுகள் தவறானவை என எதிர்காலத்தில் தெரிய நேரிட்டால் இவர் எவ்வித முன்னறிவிப்பு இன்றி பணிநீக்கம் செய்யப்படுவார்.

ஈ. நியமனதாரர் பணியேற்கும் போது அவரது பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டு மற்றும் குடிமுறை மருத்துவர் (Civil Surgeon) நிலைக்குக்குறையாத மருத்துவரிடமிருந்து உடற்தகுதிச்சான்றிதழுடன் சம்பந்தப்பட்ட அலுவலர் முன் ஒப்படைத்து பணியேற்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

உ இவரின் தற்காலிக பணிநியமனம் அரசின் பணிவரன்முறை ஆணைக்குட்பட்டது

ஊ இவர் பணியேற்ற நாளிலிருந்து இரண்டு வருட காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை மூன்று ஆண்டுகால அவகாசத்திற்குள் திருப்திகரமாக முடித்திடல் வேண்டும்.

எ. இவர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த விவர அட்டையினை பணியில் சேர்ந்த உடன் அசலாக சம்பந்தப்பட்ட துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்/ இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

...(2)

ஏ. இவர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையம், பவானி சாகரில் அளிக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான பயிற்சியினை தகுதிகாண்பருவம் முடிப்பதற்குள் முடித்திடல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

ஐ. இவர் தமிழ்நாடு அமைச்சு பணி விதி 30(b) - ன்படி பதவி உயர்வு முதுநிலை பட்டியல்படி பெறுவதற்கு கீழ்க்காணும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்:-

1. சார்நிலை பணியாளருக்கான கணக்குத்தேர்வு பகுதி -1
2. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. மருத்துவ விதித்தொகுப்பு நூல் தேர்வு

ஒ. இவர் பணி நியமன ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பணியமர்த்தல் ஆணையில் குறிப்பிட்டுள்ள பணியிடத்தில் இளநிலை உதவியாளர் பணியில் இணையுமாறு அறிவுறுத்தப்படுகிறார். தவறும்பட்சத்தில் இவரின் பணி நியமன ஆணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தி.சி.செல்வவிநாயகம்,
இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருந்துத்துறை,
சென்னை 6.

பெறுநர்

திருமதி.யோ.செலின்தங்கம்,
தா/பெ.(அமரர்)திருமதி.சா.அன்னசெல்வம்,
43ஜி / 1 ஏ, கே.வி.கே.நகர்,
எட்டையாபுரம் ரோடு தொடர்ச்சி, தூத்துக்குடி.

நகல்

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், தூத்துக்குடி.
வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், ஏரல் மற்றும் புதுக்கோட்டை, தூத்துக்குடி சுகாதாரப்பகுதி மாவட்டம்.
இவ்வலுவலக பணியாளர் தொகுதி 4 பிரிவு இருக்கை 4
இருப்புக் கோப்பு / உபரி

//உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

13/11/2023

கண்காணிப்பாளர்.

13/11/2023